செய்தி வெளியீடு எண்.441/2010 நாள்: 17.6.2010

# <u>எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம்</u>

வேலூர் மாவட்டத்திலுள்ள எரிவாயு முகவர்கள் நுகர்வோர்களுக்கு எரிவாயு பதிவு செய்வதில் மெத்தனப்போக்கு, மேலும் எரிவாயு உருளைகள் வழங்குவதில் காலதாமதம், நுகர்வோர் குறைகளை பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதில் எரிவாயு நுகர்வோர்களின் மெத்தனப்போக்கு ஆகிய குறைபாடுகள் காணப்படுவதாக நுகர்வோர்களிடமிருந்து வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து எரிவாயு இணைப்பு பெற்றுள்ள நுகர்வோர்களுக்கு வருகின்ற ஜீன் 25 ம் தேதி மாலை 3.30 மணியளவில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களது தலைமையில் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் எரிவாயு வாடிக்கையாளர் குறைதீர்வு கூட்டம் நடத்தப்பட உள்ளது. அவ்வமயம் நுகர்வோர்கள் கலந்து கொண்டு தங்களது புகார்களை மேற்காணும் கூட்டத் தலைவர் (மாவட்ட வருவாய் அலுவலர்) அவர்களிடம் தெரிவிக்கலாம்.

**செய்தி வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வேலூர்.**